**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 284/2017**

2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 17–ம் நாள் செவ்வாய்க்கிழமை என்பவரது சாட்சியின் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு T. சோழவேந்தன் B.A.,B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 17.10.2023 | தந்தை/கணவர் பெயர்: | கணபதி |
| பெயர்: | கண்ணன் (PW-1 Cross Continuation ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | நாங்கூர் | சமயம்: | |
| சாதி: | | வயது : | 65/2023 |
| தொழில் : | | | |

<u>**குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி : 17.10.2023**</u>

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யபப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார்.

தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 1 ஏக்கர் 57 செண்ட் ஆகும். ஒவ்வொரு புல எண்களிலும் எவ்வளவு விஸ்தீரணம் உள்ளது என்றால் புல எண்.190/1-ல் 1 ஏக்கர் 34 செண்ட்டும், புல எண்.190/3-ல் 8 செண்ட்டும், புல எண்.193/6-ல் 15 செண்ட்டும் உள்ளது. புல எண்.190/1-ன் நான்கெல்லை தெரியுமா என்றால் தெரியும் வடக்கு பக்கம் வாய்க்கால், மேற்கு பக்கம் வரதராஜன் பெருமாள் கோயிலுக்கு சொந்தமான நிலம் என்பது இளங்கேஸ்வரன் வசத்தில் உள்ளது, தெற்கு பக்கம் பிரதிவாதியின் நிலம் உள்ளது, கிழக்கு பக்கம் பிள்ளையார் கோயிலுக்கு பாத்தியப்பட்ட நிலம்

பிரதிவாதியின் வசத்தில் உள்ளது. புல எண்.190/3-ன் நான்கெல்லை தெரியுமா என்றால் மேற்படி 3 புல எண்களும் நான் சொன்ன நான்கெல்லைக்குள் தான் உள்ளது. தாவா சொத்துக்கள் எத்தனை பாகங்களாக உள்ளது என்றால் 3 பாகங்களாக உள்ளது. 3 புல எண்களும் தனித்தனி பாகமாக தான் வரப்புகளுடன் உள்ளது. தற்போது தாவா சொத்தில் என்ன பயிர் செய்துள்ளேன் என்றால் கோ 45 ரக நெல் பயிர் செய்துள்ளேன்.

என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல. அந்த ஆவணமானது வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வக்காலத்து ஆகும். 27.07.2005 ஆம் தேதிய நில அனுபோக சாகுபடி பாத்திய உரிமை பத்திரம் நோட்டரி வழக்கறிஞர் முன்னிலையில் நான் எழுதி கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. 27.07.2005 ஆம் வருடம் முதல் வழக்கு சொத்தின் முழு விஸ்தீரணமும் என்னுடைய சுவாதீனத்தில் இல்லை என்றும் 1 ஏக்கர் 17 செண்ட் மட்டும் தான் என்னுடைய சுவாதீனத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. புல எண்.190/3 மற்றும் புல எண்.193/6 எனது தம்பியின் வசத்தில் உள்ளது என்றால் சரியல்ல.

நான் சொல்லும் நான்கெல்லைக்குள் தாவா சொத்து இல்லை என்றும் பிள்ளையார்கோயிலுக்கு நஞ்சைக்கும், ஜெயராமன் ஆசாரி நஞ்சைக்கு மேற்கு, புருசோத்தமன் பெருமாள் கோயில் நஞ்சைக்கு செல்வராஜ் சாகுபடி நஞ்சைக்கு வடக்கு, வரதராஜ பெருமாள் கோயில் நஞ்சைக்கு செல்வராஜ் சாகுபடிக்கும் கிழக்கு, மேல்வாய்க்கால் வடிகால்கன்னிக்கும் தெற்கில் தான் உள்ளது என்றால் அது பழைய நான்கெல்லை ஆகும். 3-ம் வாதி இறந்துவிட்டார் அவரது மனைவி மட்டும் ஊரில் உள்ளார், அவரது மகன்கள் வெளிநாட்டில் வசித்து வருகிறார்கள். 3-ம் வாதியின் மனைவி எனக்கு ஆதரவாக சாட்சியம் அளிப்பாரா என்றால் அளிக்கமாட்டார். 2-ம் வாதி எனக்கு ஆதரவாக சாட்சி சொல்வாரா என்றால் சொல்வார். தாவா சொத்தின் புல எண் தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்றும் 27.07.2005 ஆம் ஆண்டு ரூ.50,000/- நான் பெற்றுக்கொண்டு பிரதிவாதி வசம் சாகுபடி பாத்தியம் கொடுத்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. தாவா

சொத்தில் நான் சொல்வது போல் கோ 45 ரக பயிர் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் பிரதிவாதி தான் ஆடுதுறை 54 ரகம் பயிர் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.